### கரூர் கொடுந்துயருக்கு முழுக் காரணமான

# த.வெ.க. தலைவர் விஜய் பொறுப்பற்று திசை திருப்புகிறார்!


## ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ கடும் கண்டனம்!

**சென்னை, நவ. 7 –**

**கரூர் கொடுந் துயருக்கு முழுக் காரணமான த.வெ.க. தலைவர் நடிகர் விஜய் பொறுப்பற்று திசை திருப்புகிறார் என ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.**

அவரது அறிக்கை வருமாறு:–

செப்டம்பர் 27 இல் கரூர் நகரத்தில் குழந்தைகள், தாய்மார்கள் உட்பட 41 பேர் பரிதாபமாக பலியாகி உயிரிழந்ததற்கு முழுக்க முழுக்க பொறுப்பேற்க வேண்டிய த.வெ.க. தலைவர் விஜய் அவர்கள் தரம் தாழ்ந்த முறையில், கண்ணியமற்ற வகையில் திசை திருப்புவதற்காக தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மீது வெறுப்பையும், கசப்பையும் பொதுக்குழு என்ற பெயரில் நடந்த கூட்டத்தில் கொட்டித் தீர்த்திருக்கிறார்.



**சினிமா டயலாக்குகள்!**

பல மணி நேரம் கால தாமதமாக அவர் கரூருக்கு வந்ததும், பெருமளவு மக்கள் கூடியிருந்த இடத்தில் பாதுகாப்புக்குரிய எந்த ஏற்பாடுகளையும் அவரும், அவரது கட்சியினரும் செய்யாமல், குடிதண்ணீர் வசதியோ, மருத்துவ வசதியோ செய்யாமல் அந்தக் கூட்டத்தில் சினிமா டயலாக்குகளை உதிர்த்தார்.

தமிழ்நாடு அரசியல் வரலாற்றிலேயே எந்தத் தலைவருடைய நிகழ்ச்சியிலும் இப்படிப்பட்ட கொடும் துயரம் நேர்ந்தது இல்லை. பெண்களும், குழந்தைகளும், கூட்டத்திற்கு வந்த பலரும் மடிந்து விட்டார்கள் என்று அறிந்த பின்னரும் கூட அவர் சென்னையை நோக்கி விரைந்து வந்துவிட்டார். திருச்சி மாநகரிலேயே அந்த இரவில் தங்கியிருக்கலாம். மறுநாள் உயிரற்றவர்களின் சடலங்களுக்கு மரியாதை செய்து, அந்தக் குடும்பத்தினருக்கு இரங்கல் தெரிவித்திருக்கலாம்.

ஒரே ஓட்டமாக சென்னைக்கு வந்தவர், இரண்டு நாள் கழித்தாவது உயிரிழந்தோரின் இல்லங்களுக்குச் சென்று அனுதாபம் தெரிவித்திருக்கலாம். ஆனால் ஒரு மாதம் கடந்த பின்னர் உயிரிழந்தோரின் குடும்பத்தினரை சென்னைக்கு வரவழைத்து அவர்களிடம் தனது போலி பச்சாதாபத்தைக் காட்டினார்.

**தவறான போக்கு!**

நடந்த சம்பவத்திற்கு துளியளவும் வருத்தப்படாமல், குற்ற உணர்ச்சியே இல்லாமல் அவர் பொறுப்பற்று நடந்துகொண்டது மிக மிக தவறான போக்காகும்.

தமிழக முதல்வர் அவர்கள் செய்தி அறிந்ததும் அமைச்சர்களையும், கட்சி முன்னணியினரையும் உடனே கரூரில் மருத்துவமனைகளுக்கும், உயிர் பலியானோரின் இல்லங்களுக்கும் அனுப்பி வைத்ததோடு, மாவட்ட ஆட்சித் தலைவர், காவல்துறை உயர் அதிகாரிகள் அனைவருக்கும் ஆணை பிறப்பித்து விட்டு, இரவோடு இரவாக கரூருக்கே சென்று உயிர் நீத்தோரின் சடலங்களுக்கு மலர் வளையம் வைத்து, பெற்றோர், உற்றார் உறவினர்களிடம் ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்து அவர் தமிழ்நாட்டின் முதலமைச்சர் என்பதை உணர்த்திக் காட்டினார்.

சட்டமன்றத்தில் கரூர் உயிர்ப் பலிக்குக் காரணமானவர் பெயரையோ, அவரது கட்சியினர் பெயரையோகூட முதல்வர் உச்சரிக்கவே இல்லை. இப்படிப்பட்ட கூட்டங்களை ஏற்பாடு செய்கின்றவர்கள், மக்களைப் பாதுகாக்கின்ற பொறுப்பையும் ஏற்க வேண்டும் என்ற வகையில்தான் முதல்வர் பேசினார்.

ஸ்டெர்லைட் நிறுவனத்திற்கு ஆதரவாக காவல்துறை தூத்துக்குடியில் படுகொலை நிகழ்த்திய இரவிலேயே துயர்ப்பட்ட அத்தனை இல்லங்களுக்கும் சென்றவன் என்ற முறையில், கரூர் சம்பவத்தால் நான் துடி துடித்துப் போனாலும், என் உடல்நலம் பாதிக்கப்பட்டிருந்த காரணத்தால் நான் கரூருக்குச் செல்ல இயலாமல் போனது. எங்கள் கட்சியின் முதன்மைச் செயலாளர் உடனே கரூருக்கு விரைந்தார்.

கரூரில் டயலாக்கை எடுத்து விடும்போதே, காவல்துறைக்குத் தான் முதலில் பாராட்டும், நன்றியும் தெரிவித்தார் என்பதையும் நினைவூட்டுகிறேன்.

**பொதுவாழ்வில் ஆத்தி சூடியைக்கூட அறியாதவர்!**

பொதுவாழ்வில் ஆத்தி சூடியைக் கூட அறியாத இந்த மனிதர் தான் ஆட்சிக்கு வந்துவிட்டதைப் போலவே கனவுலகத்திலும், கற்பனை வாழ்விலும் திளைக்கிறார். காகிதக் கப்பலில் கடல் தாண்ட முனைகிறார். ஆகாய வெளியில் கோட்டை கட்டுகிறார். அவரது நம்பிக்கைக் கனவுகள் கானல் நீராகிப் போய்விடும்.

75 ஆண்டுகளை, ஆம் முக்கால் நூற்றாண்டை கண்ணீரிலும், வியர்வையிலும், கொட்டிய குருதியிலும், சிறைச்சாலைகளிலும் கடந்து வந்த தியாகிகள் கோட்டையாம் திராவிட முன்னேற்றக் கழகத்தை சற்றும் மான வெட்கம் இன்றி எள்ளி நகையாட முனைகின்ற அவரது நிலைமை அனுதாபத்திற்கும், பரிதாபத்திற்கும், கண்டனத்திற்கும் உரியதாகும்.

இனிமேலாவது அவர் நிதானம் இழக்காமல் அரசியல் நாகரிகத்தைக் கடைபிடிக்க வேண்டும் என தெரிவிக்கிறேன்.

இவ்வாறு ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ கண்டனம் தெரிவித்துள்ளார்.



தலைமைச் செயலகத்தில், நேற்று முன்தினம் (05.11.2025) வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமையில், தமிழ்நாட்டில் பயிர் காப்பீட்டு திட்டம், வடகிழக்கு பருவ மழையால் நீரில் மூழ்கிய பயிர்களின் கணக்கெடுப்பு மற்றும் முக்கிய திட்டங்களின் செயலாக்கம் தொடர்பான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வேளாண் உற்பத்தி ஆணையர் மற்றும் அரசுச் செயலாளர் வ.தட்சிணாமூர்த்தி, வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை ஆணையர் த.ஆபிரகாம், வேளாண்மை இயக்குநர் பி.முருகேஷ், தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறை இயக்குநர் பி.குமரவேல் பாண்டியன், தலைமைப் பொறியாளர் (வே.பொ) ஆர்.முருகேசன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### அமைச்சர் மா.சுப்பிரமணியன்

# எடப்பாடி அரசு மருத்துவமனையில் திடீர் ஆய்வு!

## மருத்துவப் பயனாளியிடம் நலம் விசாரித்தார்!

*சேலம், நவ. 7 -*

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று முன்தினம் (05.11.2025) சேலம் மாவட்டம், எடப்பாடி அரசு மருத்துவமனையில் திடீர் ஆய்வு மேற்கொண்டார்கள்.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அனைத்துத்தரப்பு மக்களும் பயன்பெறும் வகையில் பல்வேறு திட்டங்களை அறிவித்துச் செயல்படுத்தி வருகிறார்கள். குறிப்பாக, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறைக்கு முக்கியத்துவம் அளித்து பல்வேறு சிறப்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வகையில் மக்களைத் தேடி மருத்துவம், இன்னுயிர் காப்போம் நம்மைக் காக்கும் 48 போன்ற திட்டங்களை சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறார்கள்.

அந்தவகையில், இன்றைய தினம் சேலம் மாவட்டம், எடப்பாடி அரசு மருத்துவமனையில் ஆய்வு மேற்கொண்டு, நோயாளிகளுக்கு வழங்கப்படும் சிகிச்சைகள் குறித்து மருத்துவர்களிடம் கேட்டறிந்தார்கள்.

மேலும், புறநோயாளிகள் பிரிவு, உள்நோயாளிகள் பிரிவு, அவசர சிகிச்சைப் பிரிவு, காய்ச்சல் பிரிவு, எலும்பு முறிவு சிகிச்சை ப் பிரிவு, இரத்த சுத்திகரிப்பு மையம், குழந்தைகள் நலப் பிரிவு, மகப்பேறு சிகிச்சை பிரிவில் ஆய்வு மேற்கொண்டு அவர்களுக்கு அளிக்கப்படும் சிகிச்சைகள் குறித்தும் கேட்டறிந்தார்கள்.

அதேபோன்று, மருந்து, மாத்திரைகள் வழங்குமிடத்தில் அவசர கால மருந்து, மாத்திரைகள் இருப்பு வைத்திருப்பது குறித்தும், உணவு தயாரிக்கும் கூடம், படுக்கை வசதிகள் உள்ளிட்ட பல்வேறு வசதிகள் குறித்தும் ஆய்வு மேற்கொண்டார்கள்.

இந்த ஆய்வின்போது சிகிச்சைக்கு வந்திருந்த பொதுமக்களிடம் மருத்துவமனையில் வழங்கப்பட்டு வரும் சிகிச்சை முறைகள் குறித்து கேட்டறிந்ததுடன், தொடர்ந்து மருத்துவமனையினை சிறந்த முறையில் பராமரித்து பணியாற்றிடும் வகையில் மருத்துவர்களுக்குத் தேவையான அறிவுரைகளை வழங்கினார்கள்.

இவ்வாறு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்கள் தெரிவித்தார்.

### திருச்செங்கோடு அரசு மருத்துவமனை - காணொலி மூலம் முதல்வர் திறந்து வைத்தார்!

# நாமக்கல் மாவட்டத்தில் பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகள்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழங்கினார்!

சென்னை, நவ. 7 –

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேற்று முன்தினம் (05.11.2025) சென்னையில் காணொளி காட்சி வாயிலாக, ரூ.23 கோடி மதிப்பில், மாவட்ட தலைமை மருத்துவமனைக்கு இணையாக மேம்படுத்தப்பட்டு திருச்செங்கோடு அரசு மருத்துவமனையினை பயன்பாட்டிற்கு திறந்து வைத்ததைத் தொடர்ந்து, நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு அரசு மருத்துவமனை வளாகத்தில் நடைபெற்ற நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி துர்காமூர்த்தி, தலைமையில், நாமக்கல் பாராளுமன்ற உறுப்பினர் வி.எஸ். மாதேஸ்வரன் திருச்செ ங்கோடு சட்டமன்ற உறுப்பினர் ஈ.ஆர்.ஈஸ்வரன் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கே.எஸ்.மூர்த்தி ஆகியோர் முன்னிலையில் கலந்துகொண்டு, மருத்துவமனையினை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு வழங்கி, பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:–

முதலமைச்சர் அவர்களின் திருக்கரங்களி னால், ரூ.23 கோடி செலவில், தரை மற்றும் 4 தளங்கள், 300 படுக்கைகள், 64,347 சதுரடி பரப்பளவில் திருச்செங்கோடு அரசு மருத்துவமனை மாவட்ட தலைமை மருத்துவமனைக்கு இணையாக மேம்படுத்தப்பட்டு இன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு அரசு மருத்துவமனை இதுவரை 160 படுக்கைகள் வசதிகளுடன் செயல்பட்டு வந்தது. புறநோயாளி கள் நாளொன்றுக்கு 700 பேர், உள்நோயாளிகள் நாளொன்றுக்கு 110 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர். மேலும், மாதத்திற்கு சராசரியாக 100 பிரசவங்கள் நடைபெற்று வருகிறது. இந்த அரசு பொறுப்பேற்ற பின் முதலமைச்சர் அவர்கள் திருச்செங்கோடு பகுதி மக்களின் நலன்கருதி, நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு அரசு மருத்துவமனையை அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைக்கு இணையாக தரம் உயர்த்த ஆணையிட்டு, ரூ.23 கோடி நிதி ஒதுக்கீடு செய்தார்கள், அதனடிப்படையில் தரை மற்றும் 4 தளங்களுடன் (G+4) கூடிய கட்டிடம் 64,347 சதுர அடியில் கட்டப்பட்டுள்ளது.

இக்கட்டிடத்தில் தரைத்தளத்தில், 8 படுக்கைகள் கொண்ட தலைக்காய சிகிச்சை பிரிவு, மருந்தகம், தொற்றா நோய் பிரிவு, மருத்துவர் அறை, 2 மின்னாக்கிகள், முதல் தளத்தில், அறுவை சிகிச்சைக்கு முன் கவனிப்பு, அறுவை சிகிச்சைக்கு பின் கவனிப்பு பிரிவு, கண் சிகிச்சை பிரிவு, முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு பிரிவு, எக்ஸ்ரே, ஆய்வகம், நுண்கதிர், இரண்டாவது தளத்தில், காது, மூக்கு, தொண்டை பிரிவு, பிரசவத்திற்கு பின் கவனிப்பு வார்டு, மருத்துவர் அறை, செவிலியர் அறை, மூன்றாவது தளத்தில், குழந்தைகள் நலப்பிரிவு, பிரசவ அறை, பிரசவத்திற்குப் பிந்தைய பிரிவு, USG Scan அறை, பிரசவத்திற்கு அவரச சிகிச்சை பிரிவு நான்காவது தளத்தில், அறுவை அரங்கம், மயக்கவியியல், செவிலியர் அறை, ஆகிய வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதன் அடிப்படையில் 140 படுக்கைகள் அதிகரித்து 300 படுக்கை வசதிகள் கொண்ட நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு அரசு மருத்துவமனையை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் திருக்கரங்களால் இன்று பொதுமக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

திருச்செங்கோடு அரசு மருத்துவமனையில் ஏற்கனவே ரூ.2.33 கோடி செலவில் சி.டி.ஸ்கேன் கருவி மற்றும் சி.ஆர்ம் கருவிகள் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் மாதம் ஒன்றுக்கு 400 சி.டி. ஸ்கேன் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகிறது. ரூ.1 கோடி செலவில் ஒருங்கிணைந்த பொது சுகாதார ஆய்வக கட்டிடப் பணிகள் நடைபெற்று வருகிறது. மேலும் ரூ.97.90 இலட்சம் மதிப்பில் திருச்செங்கோடு அரசு மருத்துவமனையில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ரூ.9 இலட்சம் மதிப்பில் திருச்செங்கோடு அரசு மருத்துவமனையில் சிறப்பு பச்சிளம் குழந்தைப் பராமரிப்பு பிரிவுக்கு அதிநவீன உபகரணங்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. திருச்செங்கோடு அரசு மருத்துவமனை NQAS தேசிய தர உறுதி நிர்ணய சான்றிதழ் பெற்ற மருத்துவமனையாகும். மேலும் பிரசவப் பகுதிக்கான தேசிய தரச் சான்றிதழ் LAQSHYA பெற்ற மருத்துவமனையாகும்.

தமிழ்நாட்டை பொறுத்தவரை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு, 19 மாவட்டங்களில் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளும், 6 மாவட்டங்களில் மக்களின் கோரிக்கையினை ஏற்று மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளுக்கு இணையாக 25 இடங்களில் புதிதாக இந்த பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றனது. இதற்காக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ரூ.1018.85 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்கள். நாமக்கல் மாவட்டத்தில் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில் பல்வேறு பணிகள் நடைபெற்று வருகிறது. அந்த வகையில் கடந்த வாரம் நாமக்கல் மாவட்டத்தில் அரசு சித்த மருத்துவமனை திறந்து வைக்கப்பட்டது. இந்த சித்த மருத்துவமனை 2 ஆண்டுகாலத்திற்கு பிறகு சித்த மருத்துவ கல்லூரியாக தரம் உயர்த்தப்படும். மேலும், நாமக்கல் மாவட்ட வட்டார மருத்துவமனை வளாகத்தில் புறநோயாளிகள் வார்டு உருவாக்கி தருவதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

தொடர்ந்து, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்கள் தேசிய காசநோய் ஒழிப்பு திட்டத்தின் கீழ், 3 காசநோயாளிகளுக்கு ஊட்டச்சத்து பெட்டகத்தினையும், 2 பயனாளிகளுக்கு முதலமைச்ச ரின் விரிவான காப்பீட்டு திட்டத்தின் காப்பீட்டு அட்டை மற்றும் 4 பயனாளிகளுக்கு உள் நோயாளிக்கான அனுமதி அட்டை ஆகியவற்றை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், திருச்செங்கோடு நகராட்சி நகர்மன்ற தலைவர் திருமதி நளினி சுரேஷ்பாபு, துணைத் தலைவர், தி.கார்த்திகேயன், 24வது வார்டு மாமன்ற உறுப்பினர் கே.பி.மகேஸ்வரி, திருச்செங்கோடு அட்மா குழு தலைவர் தங்கவேல், இணை இயக்குநர் (நலப் பணிகள்) மரு.அ.ராஜ்மோகன், மருத்துவ கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.கி.சாந்தாஅருள்மொழி, தலைமை மருத்துவ அலுவலர் மரு.எம்.மோகனபானு மற்றும் துறைச்சார்ந்த அலுவலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### வரத. கோபாலகிருஷ்ணன்

**நவம்பர் 7 (2001)**



**திருவாரூர் மாவட்டக் கழகப் பொருளாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர், ஒன்றியப் பெருந்தலைவர் உள்ளிட்ட பொறுப்புகளை வகித்தவர்.**

**நன்னிலம் பகுதியில் கழகம் வளர்க்க பாடுபட்டவர். வாழ்நாள் முழுவதும் இயக்கப் பணிகளுக்காக தன்னையே அர்ப்பணித்தவர்.**

**நெருக்கடி நிலையின்போது ஓராண்டு சிறைவாசம். மேலும், கழகம் அறிவித்த அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### க. வேல்சாமி

**நவம்பர் 7 (2007)**



**இளம் வயதிலேயே கழகக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு கழகப் பணியாற்றியவர்.**

**நாமக்கல் மாவட்டம், மோகனூர் பகுதியில் முதன்முதலாக பல்வேறு கிளைகளை கழகங்களை அமைத்தவர்.**

**மோகனூர் கிளைக் கழகம் அமைத்து, அதன் செயலாளர் பின்னர் மாவட்ட பிரதிநிதி என பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.**

**1996ல் நாமக்கல் தொகுதியில் கழக சட்டமன்ற உறுப்பினராக போட்டியிட்டு வெற்றி பெற்று, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.**

**கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**